(இ) இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்), குற்றவியல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பினைக் குறித்து மாநிலம் முழுவதிலும் விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள குழு ஒன்றினை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்குழுவில் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி பதவித்தரத்தில் உள்ள முதுநிலை அதிகாரி ஒருவரும் உள்ளனர். சட்டத்துறை, அரசு உதவிச் செயலாளர், பதவித்தரத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி ஒருவர் இக்குழுவிற்கு உதவி புரிவார். அவர் இக்குழுவின் செயலாளராகப் பணியாற்றுகிறார். கருவூல-கணக்கு இயக்குநராகிய திரு. டி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ். அவர்களும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகிய திரு. எ. வரதராசன் அவர்களும் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு 11—12—1970-லிருந்து செயல்படத் தொடங்கியது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை எத்தக் கால அளவுக்கு முன்னதாகக் கிடைக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

THIRU N. GANAPATHY : May I know whether this Committee has been asked to send recommendation in respect of territorial or pecuniary jurisdiction of courts?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் இப்போது எண்ணி வருவது மாவட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களை எந்தெந்த இடத்தில் அமைக்க முடியும், நீதிமன்ற எல்லைகளை எப்படி மாற்றியமைக்க முடியும், அதிகமான நீதிமன்றங்கள் எங்கே தேவைப்படுகின்றன என்ற அளவிலே பரிசிலிக்கப் படுகின்றன.

பெண் நீதிபதிகள்

*250 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் தற்போது எத்தனை பெண்கள் மாநில நீதித்துறையில் நீதிபதிகளாக உள்ளனர் ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் நீதித் துறையில் இரண்டு பெண்மணிகள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவர், மாவட்ட முன்சிப்பாகவும் மற்றொருவர் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட் டாகவும் உள்ளனர். திருமதி எ. சுப்புலட்சுமி, மதுரை மாவட்டம் மதுரை நகரில் இரண்டாவது மாவட்டக் கூடுதல் முன்சிப்பாக பணியாற்றுகிறார். திருமதி சி. ஆர். ராமாயி, வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட் I ஆகப் பணியாற்றுகிறார்.

திரு. பெ. மலைச்சாமி : ஆசிரியர் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் அதிகமான பெண்கள் வருகிறார்கள். ஆனால் வழக்குரைஞர் தொழிலை நடத்துவதற்கு அதிகமான பெண்கள் வருவதில்லை. ஒருசில பெண்கள் வக்கீலுக்குப்

படித்திருந்தாலும் அரசியலுக்கு வந்து விடுகிறார்கள். (திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்) .ஆகவே, பெண்களுக்காகத் தனித் திட்டம் வைத்து வழக்குரைஞர் தொழிலுக்கும், நீதிபதி பொறுப்புக்கும் தயாராகும் வரையில் அவர்களை முன்னேற்ற அரசுக்குத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் வந்து சேர்ந்தார்கள்—பார்த்திருக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வக்கீல் துறையில் இருப்பவர்கள் அரசியல் துறைக்கு வந்து விடுகிறார்கள் என்பது சரியல்ல. இப்போதே அதிகமான பெண்கள் இருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் கோர்ட்டுக்கு வந்து பார்த்தால் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிபதிகளைப் பற்றிய கேள்வி இது.

கூவம் சீரமைப்புத் திட்டம்

* 251 **வினா—திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூவம் சீரமைப்புத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை மாற்றியமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) கூவம் சீரமைப்புத்திட்டத்திற்கான திருத்த மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : May I know whether there was increase in the amount of estimate during the last one year, whether the first increase has already been accepted by Government, whether the increase is due to the fact that Government also wanted to expand some bridges which were not taken into consideration before and also whether some slabs were pasted at Cooum initially and because of rain they were washed out? May I know the details and the exact increase in the estimate?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme was designed to be executed in three stages. In the first stage the estimate was Rs. 32 lakhs, the second stage 56.50 lakhs and third stage Rs. 30 lakhs. The original estimate was Rs. 118.50 lakhs. Subsequently due to increase in tender and some other works taken up just like construction of Dhobikana for washermen, cost of inlet arrangement at Ennore for diverting Coolant water into Ennore Thermal Scheme, larger provision for beautification works and revision of standards and measurements for the works during actual execution, putting all these things together the estimate increased in the first stage from Rs. 32 lakhs to Rs. 70 lakhs. The amount of excess over estimate was Rs. 38 lakhs. Second stage estimate was Rs. 62 lakhs. The revised estimate was Rs. 108 lakhs.